From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C. .No. 14 /2012

Deposition of witness for: PW - 16

| | | | |
|---|---|---|---|
| Name | : Bakrudeen | Father/Husband Name | Sheik abdulla |
| Caste | : | Calling | |
| Religion | : | Age | |
| Date | : 20.08.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 08.2024.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் கருங்காலக்குடியில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அசா1 சேக் முகமது என்னுடைய உறவினர். ஆஜர் 5, 7 எதிரிகள் மற்றும் பிற எதிரிகளையும் எனக்கு தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு சம்பவ நாளன்று நான் மதுரைக்கு போய்விட்டு 13ம் நம்பர் பேருந்தில் வந்து எங்கள் ஊரில் இரவு 08.45 மணிக்கு இறங்கி வீட்டிற்கு சுமார் 09.00 மணிக்கு போனேன். தெருவில் கூட்டமாக இருந்தது. அந்த கூட்டத்தில் என் மனைவியும் இருந்தார். என்ன என்று கேட்டேன். பாதை பிரச்சனையால் கைகளப்பு ஆனதாகவும், என் மனைவி அவர்களை பிரித்து விட்டதாக கூறினார். என் மனைவிக்கு கையில ் அடிபட்டிருந்தது. அடிப்பட்டவர்களை மேலூா ் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். சேக் முகமதிற்கு கையில் காயம் இருந்தது. நான் விசாரித்தபோது எதிரிகளுக்கும ் அசா1ற்கு நடைபாதை பிரச்சனை ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

நீங்கள் பேருந்தை விட்டு இறங்கி போவதற்கு முன்பே சம்பவம் நடந்து முடிந்து விட்டது என்றால் ஆம். நீங்கள் போனதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பு சம்பவம்

நடந்து முடிந்ததாக சொன்னார்கள் என்றால் சுமார் 30 நிமிடத்திற்கு முன்பு என்று சொன்னார். அந்த நேரத்தில் அசா1 சேக்முகமது வீடு கட்டிக்கொண்டிருந்தாரா என்றால் ஆம். சேக் முகமது பொது பாதையை சுமார் 4 அடி ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டினார் என்றால் ஆம். சம்பவம் மந்தை அருகே நடந்ததா என்றால் நான் பார்க்கும்போது வீட்டின் அருகில் சந்தில்தான் கூட்டம் இருந்தது. உங்கள் வீட்டிற்கும் சேக் முகமது வீட்ற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 300 மீ இருக்கும். அசா1 சேக்முகமது என்ன உறவு முறை என்றால் அண்ணன் முறை. நீங்கள் சேக் முகமது இடத்தில் தான் கொட்டகை போட்டு வசிக்கிறீர்கள் என்றால் அவரது தம்பி ராஜா முகமது இடத்தில்.

2) பொதுபாதையை சுமார் 100 குடும்பங்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். 100 குடும்பங்கள் பயன்படுத்திய வழி பாதையை அசா1 சேக் முகமது தடுத்து கட்டிடம் கட்டியதால் மேற்படி 100 குடும்பங்களை சேர்ந்தவர்கள்தான் அசா1னிடம் கேட்டு பிரச்சனை செய்தார்கள் என்றால் சரிதான். அசா1 நடவடிக்கை சரியில்லாததால் கருங்காலக்குடி ஜமாத்திலிருந்து அவரை விலக்கி வைத்துள்ளர்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் மேற்படி பொதுபாதையை பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். நீங்கள் போனபோது சுமார் 100 பேர் இருந்திருப்பார்களா என்றால் அதிகபட்சமாக 25 பேர்கள் இருந்திருப்பார்கள். நீங்கள் முதல் விசாரணை எதுவும் நடைபெறவில்லை என்றும், அசா1 உங்கள் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.